**MCOP .No. 96/2017**

**Date :23.01.2023**

***ம.சா.1 சண்முகத்தாய்.***

***1, 2 ம் எ.த.கு.வி***

சம்பவ விபத்தினை நான் நேரடியாக பார்த்தேன். 2ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனத்தினை 1ம் எதிர்மனுதார் கவனமாக ஓட்டிவந்தார்என்றாலும், எனது கணவர் தான் கவனக்குறைவாக சென்று விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எனவே சம்பவ விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்றால் சரியல்ல. எனது கணவர் 100 நாள் திட்டத்தில் வேலை செய்வதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவிற்காக எனது கணவரின் வருமானம் மிகைப்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்தற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக எனது கணவர் இறந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் வாகனம் 3ம் எதிர்மனுதார் வசம் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதார் தான் இழப்பீடு வழங்க கடமைபட்டவர் என்றால் சரிதான். எனவே 1, 2 எதிர்மனுதாரைப்பொறுத்து இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**3ம் எ.த.கு.வி**

முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, விபத்து பதிவேடு உள்ளிட்ட எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே விபத்து ஏற்பட்டதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யாததால் இம்மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை, விபத்து பதிவேடு மற்றும் குற்ற இறுதியறிக்கையில் எனது கணவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என குறிப்பிடப்படடுள்ளதால் தான் அவ்ற்றினை வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்று 3 ஆண்டுகள் கழித்து தான் எனது கணவர் இறந்து போனார் என்றால் சரிதான்.

விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக எனது கணவர் இறக்கவில்லை என்றாலும், வயோதிகம் காரணமாக எனது கணவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் இறப்பிற்கு விபத்தில் ஏற்பட்ட காயம் காரணம் என்பதற்கான பிரேத கூறாய்வு அறிக்கை உள்ளிட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பு குறித்து பிரேத கூறாய்வு எதுவும் செய்யப்படவில்லை. எனது கணவர் இயற்கையாக இறந்துவிட்டதால் சம்பவ விபத்து எனது கணவரின் இறப்பிற்கு பொறுப்பு கிடையாது என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**